**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# தமிழச்சி தங்கபாண்டியனின் பாம்படத்தில் கரிசல் மக்களின் வாழ்வியல்

**திரு. அ. கோகுல்கண்ணன்**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் - 21

### ஆய்வுச்சுருக்கம்

*நகரமயமான சூழலில் நாம் இன்று வாழப் பழகியிருப்பினும், பிறந்த மண்ணின் நினைவு நம்மை விட்டு விலகுவதில்லை. தான் பிறந்த கரிசல் மண்ணின் நிலவியல் சார்ந்த பண்பாட்டினை "பாம்படம்" என்னும் கட்டுரைத் தொகுப்பில் தமிழச்சி பேசுகிறார். உண்மையான கிராமத்து மனிதர்களை தமிழச்சி கண்முன்னே நிறுத்துகிறார். இப்படைப்பில் மழை, வெயில், கடல், மல்லாங்கிணறு கிராமத்தில் ஆங்கிலப் புத்தாண்டு முதலிய சிறப்பான நாட்களை மக்கள் உணரும் விதம் என கிராமப் பின்னணியில் இருந்து பார்க்கும்போது மக்கள் எப்படி இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையினை வாழ்கிறார்கள் என்பது புலப்படுகின்றது. இந்த வாழ்வியல், அதனை வாசகர் உணர தமிழச்சி பயன்படுத்தியுள்ள உவமைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

### Abstract

Although we have become accustomed to living in an urbanized environment today, the memory of the land where we were born never leaves us. In her essay collection titled *Pambadam*, Tamilachi speaks about the cultural characteristics tied to the land of her birth. She brings to life the true rural people before the reader's eyes. In this work, elements such as rain, sunshine, the sea, and the village's bond with nature are presented, showcasing how the people experience significant days like New Year's Eve in their village setting. Through this rural backdrop, we understand how people live in harmony with nature. The essay becomes a reflection of this lifestyle, utilizing metaphors and poetic expressions to help the reader grasp the essence of it.

*திறவுச்சொற்கள்:* இயற்கை, நிலவியல், கிராமத்து விழுமியங்கள், யதார்த்த ஒப்புமை

### முன்னுரை

*நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் போன்ற பஞ்ச பூதங்களால் ஆனது இவ்வுலகம். இயற்கையைப் பேணிப் பாதுகாக்கிறோம். அவ்வியற்கையை கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் பிறந்த மல்லாங்கிணறு கிராமத்தின் கரிசல் மண் வாசனையோடு உணர்ந்து ஒன்றி வாழ்ந்த விதத்தை "பாம்படம்" என்னும் படைப்பில் யதார்த்த ஒப்புமைகளோடு பகிர்ந்திருக்கிறார். மண்சார்ந்த அந்த வாழ்வியலையும், யதார்த்த ஒப்புமைகளையும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

### மழை

*வசதியாக வாழ்பவர்களுக்கும், ஏழைகளுக்கும் மழை எவ்வாறு பயன்களை வழங்குகின்றது*

என்பதனை "அவரவர் மழை" என்னும் கட்டுரையில் கவிஞர் பகிர்கிறார். அதிகமாக மழை பெய்தாலும், பெய்யாமல் பொய்த்துப் விட்டாலும் மனிதர்களுக்குத் துன்பம்தான். ஒழுகாத வீடு, கதகதப்பாய்க் கம்பளி, நனையாத பயணம் என்று வாழ்பவர்களுக்கு மழை இன்பமானதுதான் எனினும், சாலையில் பிழைப்பு நடத்துபவர்களுக்கு மழை துன்பத்தைத் தரக்கூடியது என்பதனை,

**"ஒழுகாத வீடு, கதகதப்பாய்க் கம்பளி, நனையாத பயணம் இவற்றோடு கொஞ்சம் ரசனையும் இருந்தால் மழை சொர்க்கம் தான். மழை - பிழைப்பில் மண் அள்ளிப் போடும் அல்லது பிழைக்க வைக்கும் மக்களுக்கு - நடைபாதை வியாபாரிகள், பூ விற்பவர்கள், தள்ளுவண்டிக்கடை வைத்திரு ப்பவர்கள், மரத்தடியில் துணி தைப்பவர்கள், வீடற்ற நடைபாதை வாசிகள் எல்லோருக் கும் மழை "சனியன்" தான் "பீடை" தான்.**

**விவசாயம் பார்த்துப் பிழைப்பவரக்ளுக்கோ வந்தால் சீதேவி, வரலைன்னா மூதேவி, அதிகமாய்ப் பெய்து பயிரைப் பாழாக்கி னால் கொடுத்துச் சாகடிக்கும் சீதக்காதி"** *(பாம்படம், ப.25)*

என்னும் வரிகளில் தமிழச்சி உணர வைக்கிறார். இதில் வசதி வாய்ப்புள்ளோர், வறுமையில் பிழைப்பு நடத்துபவர்கள் என இரு தரப்பினருக்கும் மழை வரமாவதையும், சாபமாவதையும் யதார்த்தமாகக் காண முடிகிறது.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்
றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" *(குறள். 15)*

என்ற குறளில் பெய்யாமல் உயிர்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியதும், பெய்வதன் காரணமாக உயிர்களின் நலிந்த வாழ்விற்கு வளம் சேர்ப்பதும் மழைதான் என வள்ளுவர் குறிப்பிடுவது சரியே என்பதை இவ்விடத்தில் பொருத்திப் பார்க்க இயலுகிறது.

### மழை - ஒப்புமை

பெரும் மழையினைக் கொட்டித் தீர்த்த வானத்தை - **"பிரசவம் முடிந்த பெண்ணின் ஆயாசத்துடனும், சுமை குறைந்த சுகத்துட னும் தளர்வாய் ஓய்ந்திருந்தது"** *(பாம்படம். ப.24)* என குழந்தை பெற்ற தாயை வானத் திற்கு ஒப்புமை கூறுகிறார் கவிஞர்.

செல்ல வழியின்றித் தவிக்கும் மழை நீரை - **"நெடுநாள் தங்கியபின் தயங்கிப் பிரியும் விருந்தாளியைப் போல வீட்டைச் சுற்றியும், போக்கிடமற்ற நாய்க்குட்டியைப் போல வீதிகளில் தேங்கியும், நாடோடியைப் போல சாலைகளில் தங்கியும் - இந்த மழைதான் எத்தனை அவஸ்தை!"** *(பாம்படம் ப.24)* என்பதில் விருந்தாளி, போக்கிடமற்ற நாய்க் குட்டி, நாடோடி என மழை நீர் பிரிய மறுப்பதாக அல்லது எங்கு போவதெனத் தெரியாமல் தடுமாறுவதாக ஒப்புமையைக் கையாண்டுள்ளார் தமிழச்சி.

### கடலா ? கரிசல் மண்ணா ?

மல்லாங்கிணறு என்னும் கரிசல் மண் கவிஞரின் பிறந்த ஊர். அங்கு ஊருணி, கண்மாய், குளம், கிணறு, மழை மூலமாகத் தான் தண்ணீரைப் பெறுகின்றனர். பெரும் கடலைப் பார்ப்பதே கனவு விஷயம் தான். இது கவிஞருக்கு மட்டுமல்ல. அங்கு வாழக் கூடிய மக்களுக்கும் தான். எப்பொழுதும் இருக்கின்ற வெயில், எப்பொழுதாவது பெய்கின்ற மழை என்று வாழும் மக்களுக்கு கடல் அந்நியமானது தான் என்பதை,

**"இருபது வருடங்களாக சென்னையில் வாழ்ந்தாலும் கரிசல் வாசியாகிய எனக்கு கடலானது அணுக்கம் கொள்ள முடியாத அந்நிய வசீகரம்தான். கிலுகிலுப்பைக்கு மயங்கும் குழந்தைபோல், கொஞ்ச நேரம் கடலின் ஆளுமையினை வியந்துவிட்டு, அம்மாவின் பழம்புடவைத் தொட்டில் எனக் கரிசல் காட்டிற்குள் அடைக்கலமாகி விடுகிறேன்"** *(பாம்படம் ப.29)* என்று கூறுகிறார்.

### கடல் - ஒப்புமை

கடலை அவ்வளவாக அருகிற் பார்த்திராத தனக்கு **"பெரும் நீர்ப்பரப்பாய்ச் சமுத்திரம் என்பது திருவிழாவில் மிட்டாயில் செய்த கடிகாரம் போல இனிப்பு! குடை ராட்டின உச்சி போல பெரும் பிரமிப்பு"**, என கடலைப் பார்த்த மகிழ்ச்சியை குழந்தைத் தன்மையோடு கூறும் ஒப்புமையினை உணர முடிகிறது. மேலும், கடல் மீது உள்ள விருப்பத்தை **"புதுசாய்ப் போடுகின்ற உடை மாதிரி, புதிய மோஸ்த்தர் ஆபரணம் மாதிரி, வித்தியாசமான உணவின் சுவை மாதிரி என்றும், ஆனால் ஊருணியும், கண்மாயும், கிணறும் குளமும் - வேட்டி சட்டை,**

***கைத்தறிப் புடவை மாதிரித் தோலோடு நெருக்கம்" (பாம்படம் ப. 29)*** *எனத் தனக்கு உயிரோடு ஒன்றியவை கிணறு, கண்மாய் தான்! கடலல்ல! என்பதனை இவ்வுவமை மூலம் புரிய வைக்கிறார்.*

## வெயிலே மரம்

*கரிசல்காட்டு மக்களுக்கு வெயிலே மிகப் பெரிய நிழல் மரமாக இருப்பதால் குளுமை யைப் பெரிதும் எண்ணுவது கிடையாது. ஏனெனில் வெயில் அவர்களின் வாழ்வில் ஒன்றிப்போனது. அப்படிப்பட்ட கரிசலின் காந்தல் வெயிலின் ருசியினை இந்த மாநகரம் அறியாது என்கிறார் கவிஞர். இதனை ஒப்புமையில், "***தென் தமிழகத்தின் வறட்சிப் பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தில், வெயில் வீட்டாள் போல, மழையோ விருந்தாடி. அதிலும் கரிசல் காட்டு மக்களுக்கு வெயில் சவலைப் பிள்ளை போல. எந்த நேரமும் இடுப்பிலே தூக்கி வைத்துக்கொண்டு, அதே சமயம் கை வேலைகளையும் கவனித்துக் கொண்டிருப் பார்கள். குடும்பத்தில் ஒன்றான வீட்டுநாய் போல. நகரங்களில் வளர்க்கப் படுகின்ற செல்லப் பிராணியைப் போலத் தனிப்பட்ட கவனிப்பும், அவை குறித்த கவலையும் கிராமத்தின் வீட்டு நாய்களுக்குக் கிடையாது. வெயிலும் அப்படித்தான். " (பாம்படம் ப.32)*** *என செல்லப்பிராணிகள், விருந்தாளி, வீட்டாள் வெயிலுக்கு ஒப்புமை கூறுவது யதார்த்தமாக உள்ளது.*

## புத்தாண்டும் ஒரு நாளே!

*புத்தாண்டை வண்ண வண்ணமான வான வேடிக்கைகளுடன் கொண்டாடுகின்ற நகரத்திற்கும், அதுவும் ஒருநாள் தான் என வாழ்கின்ற கிராமத்து மக்களுக்கும் வித்தியாசங்கள் இருக்கவே செய்கின்றன. கரிசல் காட்டு விவசாயிகள் பலரின் இன்றைய தலைமுறை படிப்பு, பிழைப்பு என வெளிநாடு, வெளியூர்களில் இருந்து புத்தாண்டு கொண்டாடினாலும் "தேர்த் திரு விழாவிற்கு" வருகின்ற மகிழ்ச்சி, புது வருடத்திற்கு இருப்பதில்லை என்கிறார் கவிஞர்.*

*மார்கழி மாதத்தின் அதிகாலை நேரத்தில் திருப்பாவை பாடியபடி, சுடச்சுடக் கிடைக்கின்ற அந்த ருசியான பொங்கலைச் சுவைத்து கையைத் துடைத்துவிட்டு, தூணின் மறைவில் நின்று இன்னொரு முறை கைநீட்டிக் கூச்சமில்லாமல் பொங்கலை உண்ட சிறுமி "***நகரம் சேர்ந்து நாப்கினில் கை துடைத்து, அளவாய் வெட்டிய ஆங்கிலப் புத்தாண்டு கேக் சாப்பிட்ட நாரீமணியான கதையை எங்கு போய்ச் சொல்வேன் எம்பாவாய்!" (பாம்படம் ப.37)*** *என தமிழச்சி வேதனையுறுவதை உணர முடிகிறது. கிராமம்தான் மனிதர்களுக்கு இன்பத்தை வழங்குகின்றது. நகரம் சற்று துன்பம் தருவதாக கவிஞர் குறிப்பிடுகின்றார்.*

***"என்ன பெரியான், எப்படிப் புது வருஷம் என்று போன அவரை நிறுத்திக் கேட்டேன் ஒருமுறை. "உடுத்திக்கப் புடவை இல்லன்னு சித்தப்பா வீட்டுக்குப் போனா, எதிரே சித்தி ஈச்சம்பாய் சுற்றிக்கொண்டு வந்தாளாம்-ங்கிற கதைதான் செமதி என்றார் "*** *(பாம்படம் ப.37) எனக் கரிசலின் அன்றாடத் தினக்கூலி மக்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வதைபடும் மக்களுக்கு ஆங்கிலப்புத்தாண்டு ஒரு பொருட்டு கிடையாது என்பதனை மேற்கூறிய பழமொழி மூலம் புரிய வைக்கிறார் ஆசிரியர்.*

## தொகுப்புரை

*கரிசல் மக்களின் வெயில் கலந்த வாழ்வு, எங்கும் கரிசலைக் கண்டே வாழ்ந்தவர் களுக்குக் கடல் தனக்குள் நிறைவுறாது. கிணறு, குளம், கண்மாய் என்று ஒன்றிப் போன வாழ்வு, தீபாவளி - பொங்கல் போன்ற முக்கியப் பண்டிகைகளுக்கு ஒரு மாதம் முன்னரே தயாராகும் மக்கள், மனப்பாடமாகத் தமிழ் மாதங்களைக் கணக்கு வைத்து நாள் பார்க்கும் மக்கள் "ஆங்கிலத்தேதி" அதன்படியான சிறப்பு தினங்கள் அவர்களது கவனத்தில் கொள்ளாது இன்னுமொரு நாளாகப் பார்க்கும் யதார்த்த வாழ்வியல் போன்ற வற்றை கவிஞர் தமிழச்சி தங்கபாண்டிய னின் "பாம்படம்" கட்டுரைத் தொகுப்பில் மிகுதியும் கண்டுணர முடிகிறது.*

## துணைநூற்பட்டியல்


1. *தமிழச்சி தங்கபாண்டியன், பாம்படம், உயிர்மை பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு திசம்பர் - 2010.*
2. *புலியூர்க் கேசிகன் - திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம் - சென்னை, 12ஆம் பதிப்பு - 2014.*